# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

MSSRF
Science for Sustainable Development

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | சிவகங்கை | காலம் : | 04/02/2023 | முதல் | 08/02/2023 |
| அறிக்கை எண் : | 010/ 2023 | வெளியீட்டு நாள் : | 03/02/2023 | | |

## சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 32°-35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19°-24° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (29.01.2023 முதல் 02.02.2023) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –08-02-2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 29/01 | 30/01 | 31/01 | 01/02 | 02/02 | தேதி | நாள்-5 04/02 | நாள்-5 05/02 | நாள்-5 06/02 | நாள்-4 07/02 | நாள்-5 08/02 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 35 | 12 | 0 | 0 | 10 |
| 34 | 32 | 32 | 35 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 28 | 28 | 30 | 30 | 30 |
| 19 | 22 | 23 | 23 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 22 | 22 | 23 | 23 | 23 |
| 5 | 5 | 6 | 6 | 8 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 5 | 5 | 7 |
| 67 | 82 | 76 | 76 | 86 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 88 | 86 | 80 | 90 |
| 49 | 66 | 50 | 56 | 88 | | 60 | 60 | 50 | 50 | 60 |
| 11 | 9 | 11 | 10 | 7 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 12 | 12 | 10 | 8 | 8 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட மேற்கு | **காற்றின் திசை** | **தென் கிழக்கு** | **தென் கிழக்கு** | **தென் கிழக்கு** | **தென் கிழக்கு** | **தென் கிழக்கு** |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் பிப்ரவரி 4, 5 மற்றும் 8 தேதி மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 28°-30° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22°-23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 12 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## அடுத்த▯து▯ வாரத்திற்கான▯ன▯ விரிவாக்கபட்ட▯▯ வரம்பு வானிலைமுன்னறிவிப்பு 03-09 பிப் 2023):

### மழைப்பொழிவு :

03-02-2023 - 09-02-2023: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று கூடுதலானது வரையிலான மழை பெய்ய வாய்ப்பு.

### அதிகபட்ச▯ ▯ வெப்பநிலை :

03-02-2023 - 09-02-2023: மாவட்டத்தில் அதிகபட்ச▯ ▯ வெப்பநிலையானது பொதுவாக▯ இயல்பை ஒட்டி

இருக்கும்·28° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க□ கூ வாய்ப்பு·

## குறைந்தபட்ச□ கூ. வெப்பநிலை :

03-02-2023 - 09-02-2023: மாவட்டத்தில் குறைந்தபட்ச□ கூ. வெப்பநிலையை பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே இருக்கும்· 16° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

தொடர்ந்து மேக மூட்டத்துடன் கூடிய ஈரப்பதமான வானிலை நிலவுவதால் விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு 10-15 என்ற எண்ணிக்கையில் மஞ்சள் ஒட்டும்பொறி அட்டைகளை வைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டத்தையும் ஒரு ஏக்கருக்கு 5-10 என்ற எண்ணிக்கையில் ஊதா ஒட்டும்பொறி அட்டைகளை வைத்து அசுவினி மற்றும் இலைத் துளைப்பான் நடமாட்டத்தையும் கண்காணிக்கவும்.

## எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

**முக்கிய பயிர்கள்** : கொடிவகை பயிர்கள், **நெல்**, கால்நடை

### கொடிவகை பயிர்கள்:

- கொடி வகைப் பயிரைத் தாக்கும் அடிச்சாம்பல் நோய் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 350 மி நன்கு புளித்த தயிர், 50 கிராம் சூடோமோனாஸ், 250 மில்லி இளநீர் மற்றும் 6 கோழிமுட்டைகளின் வெள்ளைக்கரு இவற்றை நன்கு கலந்து தெளிக்க வேண்டும்.

### நெல்:

- நெற்பயிரில் ஆனைக் கொம்பன் ஈ கட்டுப்படுத்த 1 ஏக்கருக்கு 400 கிராம் பிப்ரொனில் அல்லது 50 கிராம் தையோமெத்தாக்ஸம் என்ற மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

### கால்நடை:

- வெள்ளாடு வளர்க்கும் விவசாயிகள் தங்களின் ஆடுகளுக்கு ஆட்டம்மை தடுப்பூசியை 3 முதல் 6 மாத வயதில் முதல் முறையும்,
- தொடர்ச்சியாக ஆண்டுக்கு ஒரு முறையும் கோடைக் காலத்திற்கு முன்னர் போடுவது அவசியமாகும்.